சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 2282 / ஆ6 /2022 நாள் 28 .03.2022

பொருள் பள்ளிக் கல்வி - அனைத்து வகை பள்ளிகள். பள்ளி மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை - பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்களுக்கு அறிவுரை வழங்குதல் - சார்ந்து

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.131, நாள். 10.08.2006
2. தமிழ்நாடு அரசு நாளிதழ் (Tamil Nadu Government Gazette) Part III - Section 1(a) நாள். 30.09.2012
3. அரசாணை (நிலை ) எண். 270 நாள். 22.10.2012

.........

சென்னை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து வகை பள்ளிகளின் தாளாளர்கள்/ முதல்வர்களின் நேரடி கவனம் ஈர்க்கப்படுகிறது. தங்கள் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை அழைத்து வருவதற்கு பள்ளி பேருந்து வாகன ஏற்பாடு செய்யப்பட்டு செயல்படுத்தி வரும் பள்ளித் தாளாளர்கள்/முதல்வர்கள் வாகனங்களை முறையாக பராமரிப்பதற்கு கீழ்க்கண்ட அறிவுரைகளை பின்பற்றி சிறப்பாக செயல்படுத்திட அறிவுறுத்தப்படுகிறது.

- பள்ளி பேருந்து வாகனங்கள் முறையாக பராமரித்து ஆண்டு தோறும் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் பரிசோதனைக்கு உட்படுத்தி வாகனங்களை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு புதுப்பிக்க படாத பள்ளி பேருந்துகளை இயக்குதல் கூடாது.
- ஓட்டுநர்கள் நியமனம் செய்யப்படும்போது உரிய கல்வித் தகுதி மற்றும் முறையாக பயிற்சி பெற்று ஓட்டுநர் உரிமம் வைத்துள்ள நபர்களை நியமிக்க வேண்டும்.
- பள்ளி பேருந்து வாகனத்தில் மாணவர்களை இருப்பிடத்திலிருந்து அழைத்து வரும்போது பேருந்தில் உதவியாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு மாணவர்களை பாதுகாப்பாக வாகனத்திலிருந்து இறக்கி பள்ளி வளாகத்தினுள்ளே அனுப்பப்பட வேண்டும். மேலும் மாணவர்கள் பள்ளி பேருந்திலிருந்து இறங்கியபின் பேருந்தின் அருகாமையில் நான்குபுறமும் மாணவர்கள் எவருமில்லை என்பதை உறுதி செய்து கொண்டு மீண்டும் வாகனத்தை இயக்க வேண்டும்.
- மாணவர்களை பள்ளிக்கு அழைத்து வந்து திரும்ப அழைத்துச் சென்றுவிட பயன்படுத்தப்படும் பள்ளிப் பேருந்துகள், வேன்கள், ஆட்டோ ரிக் ஷாக்களில் பாதுகாப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை பள்ளித்தாளாளர்/முதல்வர் உறுதி செய்யப்படவேண்டும். அவற்றில் வேகக் கட்டுப்பாட்டு கருவிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
- மாணவர்களை ஏற்றி, இறக்குவதற்கு ஓட்டுநருடன் ஒரு உதவியாளரையும் வைத்திருக்க வேண்டும். வண்டி ஓட்டும்போது திரைப்படப் பாடல்களை போடக்கூடாது.

- எக்காரணத்தை கொண்டும் வண்டியில் மிகையாக மாணவர்களை ஏற்றக்கூடாது. எந்தவொரு மாணவரும் 20-30 நிமிடங்களுக்கு மேல் பயணம் செய்யத் தேவைப்படாத வகையில் வாகனங்களின் பயணத் தடங்கள் அட்டவணையிடப்பட வேண்டும்.
- ஓட்டுநரின் குழந்தை/ குழந்தைகள்/குடும்ப புகைப்படம் ஒன்றை ஓட்டுநரின் இருக்கை எதிரில் பார்வையில்படும்படி வைக்கப்பட வேண்டும்.
- அவசரநோ நோக்கங்களுக்காக முக்கியமான தொலைபேசி எண்களை பேருந்தினுள்/வெளியே பார்வையிடும்படி எழுதி வைக்கப்பட வேண்டும்.
- பள்ளி பேருந்தின் வெளிப்பக்கத்தில் பள்ளியின் பெயர் பெரிய எழுத்துக்களில் வண்ணத்தால் எழுதப்பட்டிருக்க வேண்டும்.அரசு பேருந்துகளை பள்ளி தொடங்கும் நேரத்திற்கு ஏற்றவாறு உரிய நேரத்தில் இயக்கப்பட வேண்டும்.

## பள்ளி பேருந்திற்கான அனுமதி

- சட்டப்பிரிவு 76 ன் படி. எந்தவொரு பள்ளி வாகனமும் எந்த தனியாருக்கும் பொது இடங்களில் மாணவர்கள் பயணம் செய்யாமல் பயன்படுத்தக் கூடாது.
- தனியார் பள்ளிப் பேருந்திற்கான அனுமதி 5 வருடங்களுக்கு மட்டுமே செல்லும். பள்ளியின் அங்கீகாரம் புதுப்பித்தால் மட்டுமே இந்த அனுமதி வழங்கப்படும்.
- பள்ளிப் பேருந்து பள்ளியின் பெயரிலேயே இருக்க வேண்டும்.
- பள்ளிப் பேருந்தின் ஓட்டுநர் அதற்குரிய ஓட்டுநர் உரிமத்தை புதுப்பித்து பெற்றிருக்க வேண்டும்.
- ஓட்டுநர் பள்ளிப் பேருந்து வாகன வகைகளை ஏற்கெனவே குறைந்தது 5 வருட காலம் ஓட்டியதற்கான அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும்.
- அனுமதிக்கப்பட்ட ஓட்டுநர் ஒரே ஆண்டில் சிவப்பு விளக்கு விதி மீறல், தடம் மாறி ஓட்டுதல், வேறு நபரைக் கொண்டு ஓட்டுதல் போன்ற விதி மீறல்களை இரு தடவைக்கு மேல் செய்திருத்தல் கூடாது.
- ஒவ்வொரு ஆண்டும் ஒரு முறை ஓட்டுநர் திறனை பள்ளி அளவில் அனுமதிக்கப்பட்ட பேருந்து குழு முன் நிருபித்துக் காட்ட வேண்டும். மேலும் அந்த நேரத்தில் கண் பார்வை பரிசோதனை செய்திருக்க வேண்டும்.
- அதிவேகத்தில் ஓட்டுதல், மது அருந்திவிட்டு ஓட்டுதல், உயிர்சேதம் விளைவிக்கும் ஆபத்துகரமான ஓட்டுதலில் ஒரு தடவை கூட இருந்திருத்தல் கூடாது.
- ஓட்டுநர் Log book பராமரித்தல் வேண்டும். பேருந்தில் ஏற்படும் பழுதுகளை Log book -ல் குறிப்பிட்டும் அப்பழுதை நீக்கியவுடனும் பதிவு செய்தல் வேண்டும்.
- பணியில்இருக்கும்போது சீருடையில் இருக்க வேண்டும். அவருடைய சீருடையில் இடதுபுற பையில் அவருடைய பெயர் (தமிழிலும், ஆங்கிலத்திலும்) Badge எண், மாவட்டத்தின் பெயர், குறிப்பிட்டு வெள்ளை நிற பிளாஸ்டிக் அட்டை பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
- பேருந்து மிகை வேகத்திற்கு மிகை இல்லாமல் ஓட்டுநர் பேருந்தின் வேகத்தை கட்டுப்படுத்தி ஓட்ட வேண்டும்.

- ஓட்டுநருக்கான பள்ளி நிர்வாகத்தின் ஆளறிச் சான்றிதழ் மண்டல போக்குவரத்துத் துறை வழங்கி பெறப்பட்ட சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.
- சாலை விதிகளை மதித்து கவனத்துடன் ஓட்டுதல் வேண்டும்.

மேற்கண்ட செயல்பாடுகளை பள்ளி வாகனங்களை இயக்கும் அனைத்து பள்ளித் தாளார்கள்/முதல்வர்கள் கண்காணித்து மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

23/3/2022

பெறுநர்

அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள், சென்னை மாவட்டம்

நகல்

அனைத்து ஆய்வு அலுவலர்கள், சென்னை மாவட்டம் தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.